தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்



# வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் 11-வது பட்டமளிப்பு விழா

## மத்திய மந்திரி காணொலி மூலம் உரையாற்றினார்

தாம்பரம், ஜன.12-

சென்னை பல்லாவரத்தில் உள்ள வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்தின் 11-வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இந்த பட்டமளிப்பு விழாவில் மத்திய தகவல் ஒலிபரப்பு, இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை மந்திரி அனுராக்சிங் தாகூர் காணொலி வாயிலாக கலந்துகொண்டு உரையாற்றினார்.

விழாவுக்கு வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கணேஷ் தலைமை தாங்கி, தொழில் அதிபர் வி.ஜி.சந்தோசம், நடிகர் சிலம்பரசன், விளையாட்டு வீரர் மாரியப்பன் ஆகியோருக்கு கவுரவ டாக்டர் பட்டங்களை வழங்கினார். அரசியல் தலைவர்களின் நிர்வாகமுடிவுக்கான வாக்காளர்களின் நடத்தை குறித்து ஆய்வுக்கட்டுரை வெளியிட்ட மன்னார்குடி எம்.எல்.ஏ.வான டி.ஆர்.பி.ராஜாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் துறைவாரியாக பதக்கம் பெற்ற மாணவர்களுக்கும், முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கு மட்டும் பட்டங்கள் நேரில் வழங்கப்பட்டன. இதில் வேல்ஸ் பல்கலைக்கழக இணைவேந்தர் (திட்டம் மற்றும் வளர்ச்சி) ஜோதி முருகன், இணைவேந்தர் (கல்வி) ஆர்த்தி கணேஷ், வேல்ஸ் குழும நிறுவனங்களின் துணைத்தலைவர் பிரீதா கணேஷ், துணைவேந்தர் ஸ்ரீமன் நாராயணன் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

கொரோனா தொற்றை கருத்தில்கொண்டு, 4 ஆயிரத்து 69 பட்டம் பெறும் மாணவர்கள் இணையவழியில் விழாவில் பங்கேற்றனர்.